16.12.2024

அ.வ.எண். 82-2021

வாசா.2 - ராசு (எ) பழனிச்சாமி

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

வட்டாட்சியர் சூலூர் அவர்கள் கருமத்தம்பட்டி கிராம புல எண்.476/5 ற்கு கொடுத்த UDR, RSR மற்றும் பழைய RSR ன் உண்மை நகல் வா.சா.ஆ.1. 03.12.2020 தேதியில் 4ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2. 09.11.2020 தேதியில் வாதி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3. ரங்கன் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ.4. ரங்கனின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ.5. ராயனின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ.6. சின்னானின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ.7. என்னுடைய ஜாதி சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ.8. பதுவம்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த CONDITION REGISTER வா.சா.ஆ.9.

மேற்படி ஆவணங்கள் பிரதிவாதியின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் கருமத்தம்பட்டி, ராயர்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் டயர் கம்பெனிக்கு வேலைக்கு செல்கிறேன். 1 முதல் 3 வாதிகளுக்கு வயதாகிவிட்டது, அதனால் வேலைக்கு செல்லவில்லை. எனது தம்பி தறி ஓட்ட செல்கிறார். முருகன் கூலி தொழில் செய்து வருகிறார். வழக்கு சொத்து ரங்கனுக்கு பட்டா கொடுத்ததாக சொல்லிஉள்ளேன். மேற்படி கொடுக்கப்பட்ட பட்டாவின் நகல் அல்லது அசல் எதுவும் என் வசம் இல்லை. ரங்கனுக்கு கொடுக்கப்பட்ட நிபந்தனை பட்டா அந்த நிபந்தனையை பூர்த்தி செய்ததற்கான பணம் கட்டியதற்கான ஆதாரங்கள் என் வசம் இல்லை. ரங்கன் இடத்தை விவசாயம் செய்ததற்கான ஆவணம் இல்லை. நான் வழக்கு சொத்தில் விவசாயம் செய்ததை காட்டுவதற்கு

அடங்கல் கணக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ரங்கன் பட்டா பெற்றதாக சொல்லும் தேதியில் இருந்து இன்றுவரை எங்களது அனுபவத்தில் விவசாயம் செய்து வந்தது, சொத்து இருந்தது என காட்ட நான் அடங்கல் தாக்கல் செய்யவில்லை. தற்போது வழக்கு சொத்து கருமத்தம்பட்டி கிராமம், ஜான்சன் கல்லூரிக்கு அருகில் புல எண்.476/1 ஆக இருந்து தற்போது 476/5 என உட்பிரிவாகியுள்ளது. தற்போது வழக்கு சொத்தில் நான் விவசாயம் செய்யவில்லை. வழக்கு சொத்து தரிசு நிலமாக உள்ளது என்றால் ஆமாம். தற்போது வழக்கு சொத்தில் போர்வெல் மற்றும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் இல்லை.

நான் ASSIGNMENT உத்தரவை படித்து பார்த்துள்ளேன். சா.சா.ஆ.1 ASSISGNMENT உத்தரவு என்ன நிபந்தனைகள் உள்ளது என்று சாட்சியிடம் படித்து காட்டச் சொல்லி கேட்டபோது சாட்சி எழுத்து ஆங்கிலத்தில் இருப்பதால் என்னால் படிக்க முடியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். மேற்படி சா.சா.ஆ.1 ல் நிபந்தனை பட்டா கொடுக்கப்பட்டதில் இருந்து 10 வருடத்திற்கு வில்லங்கம் எதுவும் செய்யகூடாது என்று மட்டும் தான் நிபந்தனை உள்ளது என்றால் சரியல்ல. அது 20 வருடங்களுக்கு வில்லங்கம் செய்யக்கூடாது என்று வில்லங்கம் உள்ளது. அதேபோல் சா.சா.ஆ.1 நிபந்தனை பட்டாவில் பட்டா கொடுக்கப்பட்ட ரங்கன் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்ற வாசகம் இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் அதன் உடன் இணைந்த D-NAMUNA வில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவருக்கு கொடுக்கப்பட்டதாக குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு சொத்து ரங்கனுக்கு தாழ்த்தப்பட்ட சமூதாயத்தை சேர்ந்தவர் என்ற காரணத்தின் அடிப்படையில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அருகில் தற்போது வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு அது பல நபர்கள் கிரயம் பெற்றுள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.1983 ல் ரங்கன் ரூ.4,360/- ற்கு வழக்கு சொத்தை ஒரு சுப்பிரமணியம் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரம் மூலம் கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை.

எனக்கு தெரிந்து மேற்படி சங்கதியை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரயம் பெற்றதிலிருந்து சுப்பிரமணியம் தான் வழக்கு சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. 2006 ல் மேற்படி சுப்பிரமணியமும் அவரது சகோதரர் பழனிச்சாமியும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் வழக்கு சொத்து பழனிச்சாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2006 ல் இருந்து பழனிச்சாமி தான் வழக்கு சொத்தில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

தற்பொழுது வரை வழக்கு சொத்திற்கான பட்டா, அடங்கல் பழனிச்சாமி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திலிருந்து அருகில் உள்ள LAYOUT மனைப்பிரிவுகள் வழியே செல்வதற்கு ஒரு தடப்பாத்திய செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. நில எடுப்பு சம்மந்தமாக எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. அது தொடர்பான அனைத்து அறிவிப்புகளும் பிரதிவாதிக்கு தான் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. வேறு யாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நில எடுப்பு சம்மந்தமாக எனக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் எங்களது காட்டை 3ம் பிரதிவாதி அளந்து கொண்டிருந்தார் அப்போது நான் கேட்டபோது எனக்கு இந்த விசயம் தெரியவந்தது. நான் என்னுடைய இடம் என்று சொன்னதற்கு பின்னிட்டும் எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை.

நான் பிரதிவாதிக்கு இழப்பீட்டு தொகை கொடுக்ககூடாது என்று நான் தாசில்தார் அலுவலகத்தில் மனு கொடுத்து அதன் விசாரணைக்கு சென்றிருந்தேன். என் தரப்பில் கொடுக்கப்பட்ட மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி நான் கொடுத்த மனுக்கள் தள்ளுபடி ஆனதால் தான் நான் இந்நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் அரசாங்கம் கொடுத்த காடு எங்களுக்கு பாத்தியம் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். சாட்சி பணம் தங்களுக்கு வேண்டும் என்று சாட்சியம் அளித்தார். பணம் எங்களுக்கு சேர வேண்டும் என்று

கேட்பதற்கு நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பழைய RSR, புது RSR, பட்டா உத்தரவு ஆகியவை தாக்கல் செய்துள்ளேன். ரங்கனுக்கு பின்னிட்டு வழக்கு சொத்து எங்களது பெயரில் இருந்ததை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி தான் உரிமையாளர் என்பதால் அவரது பெயரில் தான் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது என்றும் அவருக்கு தான் எல்லா வகையான அறிவிப்பும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நாங்கள் அனுபவத்தில் இருந்ததாகவும் விவசாயம் செய்ததாகவும் சொல்வது பொய் என்றும் வழக்கு சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு 3ம் பிரதிவாதி தரப்பில் இழப்பீட்டு தொகை கொடுப்பதை தெரிந்துகொண்டு துர்லாபம் அடைய கெட்ட எண்ணத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ராசு (எ) பழனிச்சாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur